பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

05 06 2026        FRIDAY  6 30 PM

வணக்கம் - மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. டிஜிட்டல் பொருளாதாரத்தில் இந்தியா முன்னணியில் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. சுற்றுச் சூழலை பாதுகாக்க அனைவரும் உறுதியேற்றுக் கொள்ள வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கேட்டுக் கொண்டுள்ளார்

3. பேரிடர் காலங்களில் உயிர்ச் சேதத்தை தவிர்ப்பதை முக்கிய நோக்கமாக கொண்டு அதிகாரிகள் செயல்பட வேண்டும் என்று முதலமைச்சர் திரு. விஜய் அறிவுறுத்தியுள்ளார்.

4. திமுக கூட்டணியில்தான் நீடிப்பதாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கூறியுள்ளது.

5. Ulaanbaatar ஓப்பன் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா 2 தங்கம், இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

>>>>>><<<<<

டிஜிட்டல் பொருளாதாரத்தில் இந்தியா முன்னணியில் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், டிஜிட்டல் கட்டமைப்பு துறையின் வளர்ச்சி தொடர்ந்து பல்வேறு சாதனைகளை படைத்து வருவதாக கூறினார்.

இதன் காரணமாக, AirTrunk நிறுவனம் இந்தியாவில் 3 லட்சம் கோடி ரூபாயை முதலீடு செய்யவுள்ளதாக அறிவித்துள்ளதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் காரணமாக, கூடுதல் வேலைவாய்ப்புகள் உருவாகக்கூடும் என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் உள்ளிட்ட அதிநவீன தொழில்நுட்பங்களின் முனையமாக இந்தியா வளர்ந்து வருவதை இந்த முதலீடு எடுத்துரைப்பதாகவும் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

>>>>>><<<<<

சுற்றுச் சூழலை பாதுகாக்க நாட்டு மக்கள் அனைவரும் உறுதியேற்றுக் கொள்ள வேண்டும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சர்வதேச சுற்றுச்சூழல் தினத்தை ஒட்டி புதுதில்லி ஆகாஷ்வாணி வளாகத்தில் அன்னையின் பெயரில் மரம் நடும் இயக்கத்தின் கீழ், மரக்கன்றுகளை நட்டுவைத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

நீர் சேமிப்பின் அவசியத்தையும் அமைச்சர் வலியுறுத்தினார்.

>>>>>><<<<<

தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர் வரும் 18ஆம் தேதி தொடங்கவுள்ளதாக பேரவைத் தலைவர் திரு. ஜே.சி.டி. பிரபாகர் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

>>>>>><<<<<

பேரிடர் காலங்களில் உயிர்ச் சேதத்தை தவிர்ப்பதை முக்கியமான நோக்கமாக கொண்டு அதிகாரிகள் செயல்பட வேண்டும் என்று முதலமைச்சர் திரு. விஜய் அறிவுறுத்தியுள்ளார்.

இன்று சென்னையில் நடைபெற்ற பேரிடர் மேலாண்மை ஆணையக் கூட்டத்திற்கு தலைமை வகித்து அவர் பேசினார்.

மாவட்ட நிர்வாகம் மற்றும் அவசர கால செயல்பாட்டு மையங்கள் 24 மணி நேரமும் பணியாற்றும் வகையில் தயார்நிலையில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

மழைக்காலங்களில் ஏற்படும் பாதிப்புகளை தவிர்க்க தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் முதலமைச்சர் இக்கூட்டத்தில் வலியுறுத்தினார்.

>>>>>><<<<<

மேகதாது அணையை கட்டுவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளை தமிழக அரசு சட்டரீதியாக தடுத்து நிறுத்தும் என்று மாநில அமைச்சர் திரு நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுதொடர்பான சட்டரீதியிலான ஆலோசனைகள் நடைபெற்று வருவதாக கூறினார்.

போதைப்பொருள் புழக்கத்தை முழுமையாக ஒழிக்க த.வெ.க. அரசு உறுதியான நடவடிக்கைளை மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>><<<<<

திமுக கூட்டணியில் தான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தொடர்வதாக அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. முத்தரசன் கூறியுள்ளார்.

திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், த.வெ.க. அரசுக்கு தங்கள் கட்சி வெளியிலிருந்து ஆதரவு அளித்து வருவதை சுட்டிக்காட்டினார்.

எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், கடன் வாங்கி தான் நிர்வாகம் செய்ய முடியும் என்றும் திரு. முத்தரசன் தெரிவித்தார்.

>>>>>><<<<<

தமிழகத்திலிருந்து மாநிலங்களவைக்கு ஒரு உறுப்பினரை தேர்ந்தெடுப்பதற்காக நடைபெறவுள்ள இடைத்தேர்தலில் த.வெ.க. கூட்டணி அரசில் இடம்பெற்றுள்ள காங்கிரஸ் கட்சி சார்பில் திரு. பிரவின் சக்கரவர்த்தி இன்று வேட்புமனுதாக்கல் செய்தார்.

சட்டப்பேரவை செயலரிடம் அவர் வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

தம்மீது நம்பிக்கை வைத்து இந்த வாய்ப்பை வழங்கிய மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்திக்கும், முதலமைச்சர் திரு. விஜய்க்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதாக திரு. பிரவின் சக்கரவர்த்தி சமூகவலைதளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<

கோவையில் அப்துல்கலாம் பெயரில் அரசியல் பயிற்சி மையம் தொடங்கப்படும் என்று பிஜேபியிலிருந்து விலகியுள்ள திரு. அண்ணாமலை கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் காணொலி வாயிலாக இதனை தெரிவித்த அவர், புதிய அரசியல் இயக்கம் தொடங்கப்படவுள்ளதாக கூறினார்.

தாம் தொடங்கவுள்ள இந்த இயக்கம் அடுத்த தேர்தலில் போட்டியிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

கோவை மையத்தில் பயிற்சி எடுத்தவர்கள் வரும் தேர்தல்களில் போட்டியிடுவார்கள் என்று திரு. அண்ணாமலை கூறினார்.

>>>>>><<<<<

El Niño உள்ளிட்ட இயற்கை பேரிடர்களை துல்லியமாக கணித்து முன்கூட்டியே தகவல் வழங்கப்பட்டு வருவதாக மத்திய புவி அறிவியல் துறையின் செயலர் திருமதி. கலைச்செல்வி கூறியுள்ளார்.

இன்று தஞ்சாவூரில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

>>>>>><<<<<

நீலகிரி, கோவை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்று கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்காசி, திருநெல்வேலி, தேனி, திண்டுக்கல், திருப்பூர், கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து மாநில அமைச்சர் திரு. ராஜ்குமார், இன்று அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

>>>>>><<<<<

ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணத்தில் உள்ள INS Rajali கடற்படை விமானத் தளத்தில் ஹெலிகாப்டர் இயக்கம் குறித்த பயிற்சி நிறைவு விழா இன்று நடைபெற்றது.

>>>>>><<<<<

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடியில் பள்ளி மாணவர்களுடன் இணைந்து, வருவாய் கோட்டாட்சியர் திரு. தணிகாச்சலம் இன்று மரக்கன்றுகளை நட்டார்.

>>>>>><<<<<

திருவண்ணாமலை மாவட்டம், வேங்கிக்காலில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ஆட்சியர் திருமதி. வந்தனா கர்க் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>>>><<<<<

செங்கல்பட்டு மாவட்டத்தில் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில், ஆட்சியர் திரு. வீரப்பன் இன்று தூய்மைப் பணிகளை மேற்கொண்டார்.

>>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

Ulaanbaatar ஓப்பன் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா 2 தங்கம், இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

மகளிர் 57 கிலோ எடைப்பிரிவில் Manisha-வும், 59 கிலோ எடைப்பிரிவில் Neha Sangwan-ம் தங்கப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் 60 கிலோ எடைப்பிரிவில் Sahil-லும், மகளிர் 50 கிலோ எடைப்பிரிவில் Neelam-மும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 4 தங்கம், இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

>>>>>><<<<<

நார்வே செஸ் போட்டியின் 9-வது சுற்று முடிவில் இந்தியாவின் பிரக்ஞானந்தா 15 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

>>>>>><<<<<

23 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய தடகள சாம்பியன் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

Dev Kumar Meena, Kuldeep Kumar உட்பட 54 பேர் இதில் இடம்பெற்றுள்ளனர்.

இப்போட்டி சீனாவின் Ordos-ல் அடுத்த மாதம் 9ஆம் தேதி தொடங்கி 12ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

>>>>>><<<<<

18 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை ஹாக்கி போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ஜப்பானில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா 5-3 என்ற கோல்கணக்கில் பாகிஸ்தானை வென்றது.

>>>>>><<<<<

ஆசிய தனிநபர் செஸ் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Savitha Shri முதலிடத்தில் உள்ளார்.

Ulaanbaatar-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் பிரிவு 8வது சுற்று முடிவில் அவர், ஆறரை புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

>>>>>><<<<<

குத்துச்சண்டை போட்டிகளுக்கான சர்வதேச தரிவசை பட்டியலின் மகளிர் 48 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் Meenakshi Hoodaவும், 57 கிலோ எடைப்பிரிவில் Jasmine Lamboria-வும் முதலிடத்தை பிடித்துள்ளனர்.

>>>>>><<<<<

இந்தியா - தஜிகிஸ்தான் இடையேயான நட்புணர்வு கால்பந்து போட்டி இன்று நடைபெறுகிறது.

Tursunzoda -வில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு எட்டரை மணிக்கு தொடங்குகிறது.

>>>>>><<<<<

இலங்கையில் நடைபெறவுள்ள முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் பங்கேற்பதற்கான இந்தியா-ஏ அணி இன்று கொழும்பு சென்றடைந்தது.

இலங்கை-ஏ அணி, ஆப்கானிஸ்தான்-ஏ அணிகள் இப்போட்டியில் பங்கேற்கின்றன.

>>>>>END<<<<<